அண்ணா தி.மு.க.வை உடைக்க தி.மு.க. சதி செய்து கொண்டிருக்கிறது

வேலூரில் எடப்பாடி பழனிசாமி பேச்சு

வேலூர், ஆக.10

அண்ணா தி.மு.க.வை உடைக்க துரோகிகளோடு சேர்ந்து தி.மு.க. சதி செய்து கொண்டிருக்கிறது என்று வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

அண்ணா தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி கே.பழனிசாமி தேர்வு செய்யப்பட்ட பின்னர் வேலூர் மாவட்டத்திற்கு நேற்று முதல் முறையாக வருகை தந்தார். சேலத்தில் இருந்து சென்னை செல்லும் வழியில் அவருக்கு வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே வேலூர் மாநகர் மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு வேலூர் மாநகர மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளர் எஸ். ஆர்.கே.அப்பு தலைமை தாங்கி பூங்கொத்து, வெள்ளி கதாயுதம் கொடுத்து எடப்பாடி பழனிசாமியை வரவேற்றார்.

நிகழ்ச்சியில், அண்ணா தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:

அண்ணா தி.மு.க. என்ற பேர் இயக்கம் ஜனநாயக முறையில் எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் கட்டி காக்கப்பட்ட இந்த இயக்கத்திற்க்கு சாதாரண தொண்டன் கூட உயர்ந்த பதவிக்கு வர முடியும். அதற்கு நானே உதாரணம். கட்சிக்கு உண்மையாக உழைப்பவர்கள் கண்டிப்பாக உயர் நிலையை அடையளாம். தி.மு.க.வில் கருணாநிதி குடும்பம் மட்டுமே வர இயலும். மற்றவர்கள் யாரும் வரமுடியாது.

எதிர்க்கட்சி அந்தஸ்து கூட பெற முடியாது

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அண்ணா தி.மு.க.வை எப்பாடுபட்டதாவது உடைக்க வேண்டும் என்று கங்கனம் கட்டி கொண்டிருக்கிறார். அவருடைய தந்தை மு.கருணாநிதி பலமுறை உடைக்க முயற்சி செய்தார். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா இருந்த காலத்தில் அண்ணா தி.மு.க.வை கருணாநிதியால் உடைக்க முடியவில்லை. அவராலேயே முடியவில்லை. இந்த ஸ்டாலினாலா அண்ணா தி.மு.க.வை உடைக்க முடியும். இங்கிருக்கும் தொண்டர் பட்டாளங்களால் நிறைந்தது அண்ணா தி.மு.க.

மு.க.ஸ்டாலின் அவர்களே சில துரோகிகளோடு சேர்ந்து கொண்டு இந்த இயக்கத்தை முடக்கலாம் என்று எண்ணி விடாதீர்கள். அப்படி எண்ணினால் எதிர்காலத்தில் தி.மு.க. எதிர்கட்சி அந்தஸ்தை கூட பெற முடியாது.

தி.மு.க.வினர் ஆட்சி, அதிகாரத்தில் இருந்து கொண்டு அண்ணா தி.மு.க. நிர்வாகிகளையும், தொண்டர்களையும் மிரட்டி பார்க்கிறீர்கள். சோதனைகளை படிகட்டுகளாக்கி சாதனை படைத்த கட்சி அண்ணா தி.மு.க. என்று வரலாறு கூறுகிறது. அரிதாக மு.க.ஸ்டாலினுக்கு முதலமைச்சர் பதவி கிடைத்துள்ளது. அதனை வைத்து மக்களுக்கு நல்லது செய்ய பாருங்கள். எப்போதும் தி.மு.க. மக்களுக்கு நல்லது செய்ததாக வரலாறு கிடையாது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒரு பேச்சு. ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு பேச்சு. அப்படியே அந்தர் பல்டி அடித்து விடுவார்கள்.

தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக மக்களுக்கு பல்வேறு வாக்குறுதி கொடுத்தார்கள். ஆட்சிக்கு வந்தால் முதல் கையெழுத்து நீட் தேர்வு ரத்து என்றார்கள். ஆனால் என்னாச்சு?. அது ஏமாற்று வேலை. ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து இல்லதரசிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை கொடுப்போம் என்றார்கள். ஆனால் இதுவரை கொடுக்கவில்லை. 100 நாள் வேலை திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும். அவர்களின் ஊதியம் அதிகரிக்கப்படும். கல்விக்கடன் ரத்து செய்யப்படும். சமையல் கியாஸ் சிலிண்டருக்கு ரூ.100 மானியம் கொடுக்கப்படும் என்றார்கள். ஆனால் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

நம்பி ஓட்டு போட்டு மக்களுக்கு ஆன்லைன் ரம்மி சூதாட்டத்தை தடுப்போம் என்று சொல்லிவிட்டு இன்று பலரின் வாழ்க்கையை கீழே தள்ளி, உயிர் இழுக்கும் நிலைக்கும் தள்ளப்பட வைத்து விட்டனர். இதற்கெல்லாம் மக்கள் தான் பதில் அளிக்க வேண்டும்.

பொங்கல் பரிசில் வழங்கப்பட்ட பொருட்களை யாரும் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. பொங்கல் பரிசு என்ற பெயரில் ரூ.500 கோடி ஊழல் செய்தது தான் மிச்சம்.

அண்ணா தி.மு.க.வை உடைக்க சதி

அண்ணா தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மீது பொய் வழக்கு போட்டு அவர்களை முடக்க முடியாது. எத்தனை பொய் வழக்கு போட்டாலும் அத்தனையும் தவிடு பொடியாக்கி அண்ணா தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும். அண்ணா தி.மு.க.வை உடைக்க வேண்டும், சிதறடிக்க வேண்டும் என்று தி.மு.க. திட்டமிட்டு சதி செய்து கொண்டிருக்கிறது. அதனை முறியடிக்கும் சக்தி அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்கு உண்டு. யாரையும் அடக்கி ஆள முடியாது. அடக்கி ஆள நினைத்தால் இலங்கை நிலைதான் இங்கும் வரும். மக்கள் புரட்சி வெடித்தால் யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

14 மாத தி.மு.க. ஆட்சியில் அனைத்து துறைகளிலும் சுமார் ரூ.20 ஆயிரம் கோடி ஊழல் செய்துள்ளனர். ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி தி.மு.க.. அதே நிலைமை வந்தாலும் வந்து விடும். 2024–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலோடு மாநிலத்துக்கும் தேர்தல் வந்தாலும் வரும். இந்த அரசாங்கம் எப்போது வீட்டுக்கு செல்லும் என்று ஒவ்வொரு நாளும் மக்கள் ஏக்கத்தில் உள்ளனர்.

மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு ஆதரவு தர வேண்டும். மீண்டும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சி அமைப்போம். ஏழை எளிய மக்களை காப்போம். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி, அண்ணா தி.மு.க. பொருளாளர் எம்.மூர்த்தி, ஜனனி சத்திஸ், ஜெ.பி.ஏ.ஏ தாஸ், மாணவர் அணி எம்.டி.பாபு, எம்.ஏ.ராஜா, எம். ஆனந்தன், பகுதி கழக செயலாளர்கள் ஏ.பி.எல் சுந்தரம், குப்புசாமி, ஜனார்த்தனன், ரவி, நாகு, ஜெயசங்கர் மற்றும் சி.கே.சிவாஜி, எஸ்.எல்.சீனு, எஸ்.ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நாட்டறம்பள்ளி பஸ் நிலையம் மற்றும் பள்ளிகொண்டா சுங்கச்சாவடி அருகில் எடப்பாடி பழனிசாமிக்கு அண்ணா தி.மு.க.நிர்வாகிகள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காட்டில் அக்ரம் நினைவு கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற பழவேற்காடு டான் செலக்ட் அணிக்கு கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராசன் கோப்பைகளை வழங்கினார். மாவட்ட ஊராட்சிக் குழுப் பெருந்தலைவர் கே.ஜி.உமா மகேஸ்வரி, மீஞ்சூர் ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் ஜி.ரவி மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சுகுமாரன், கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் மணிபாலன், பொன்னேரி நகரச் செயலாளர் வழக்கறிஞர் ரவிக்குமார், மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் மாதர் பாக்கம் குணசேகரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூரில் எம்.ஜி.ஆர். கோவில் கும்பாபிஷேகம் 21ந்தேதி நடக்கிறது: சைதை துரைசாமி தகவல்

சென்னை, ஆக.10

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் அருகேயுள்ள நத்தமேடு கிராமத்தில் உள்ள எம்.ஜி.ஆர். கோவில் கும்பாபிஷேகம் வருகிற 21 ந்தேதி நடைபெற இருக்கிறது.

இதுகுறித்து உலக எம்.ஜி.ஆர். பேரவை தலைவரும், பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயருமான சைதை துரைசாமி கூறியதாவது:– கடந்த 2011ம் ஆண்டு ஆகஸ்டு 15ந்தேதி கட்டப்பட்ட எம்.ஜி.ஆர். கோவிலில் கடந்த 11 ஆண்டுகளாக பூஜைகள், அபிஷேக ஆராதனைகள் நடந்து வருகின்றன. தமிழகம் தாண்டி அண்டை மாநிலங்களில் இருந்து ஏராளமான எம்.ஜி.ஆர். பக்தர்கள் இங்கு வந்து வழிபட்டு செல்கிறார்கள். இந்த கோவிலின் முகப்பு கோபுரம் கட்டும் பணிக்கு நான் அடிக்கல் நாட்டினேன். தற்போது கோபுர திருப்பணிகள் மற்றும் கருவறையில் உள்ள எம்.ஜி.ஆரின் உருவசிலை அமைக்கும் பணிகள் எனது ஏற்பாட்டில் நடந்து வருகின்றன. இதுதவிர முகப்பு கோபுரம் கட்டும் பணி உள்ளிட்ட திருப்பணிகளுக்கு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக வேந்தர் ஏ.சி. சண்முகம், 'வேல்ஸ்' பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ், எம்.ஜி.ஆரின் தீவிர பக்தர் தேனி ஜீவானந்தம் உள்ளிட்ட ஏராளமான எம்.ஜி.ஆர். பக்தர்கள் நிதி உதவி வழங்கியிருக்கிறார்கள்.

இந்த ஆண்டும் ஆகஸ்டு 15ந் தேதி எம்.ஜி.ஆர். கோவில் ஆண்டு விழாவும், மகா கும்பாபிஷேகமும் நடைபெறுவதாக இருந்தது. இந்த நிலையில் திருப்பணிகள் நடைபெறுவதில் சற்று தாமதம் ஏற்பட்டிருப்பதால், கும்பாபிஷேக விழா வருகிற 21ந்தேதி நடத்திட நிர்வாகம் முடிவு எடுத்திருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

MUNOTH FINANCIAL SERVICES LIMITED

Regd. Office : Suite No. 46 & 47 "MUNOTH CENTRE",
343, Triplicane High Road, 3rd Floor, Chennai 600 005. CIN : L65991TN1990PLC019836

UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE 2022

(Rs. In Lakhs)

Sl. No.	Particulars	STANDALONE			
		Quarter ended 30.06.2022	Quarter ended 31.03.2022	Quarter ended 30.06.2021	Year ended 31.03.2022
		Unaudited	Audited	Unaudited	Audited
1	Total income from operations	12.17	14.03	24.57	67.72
2	Net Profit / Loss for the period (before Tax, Exceptional and / or Extraordinary items #)	(2.11)	(14.09)	10.02	(4.75)
3	Net Profit / Loss for the period before tax (after Exceptional and / or Extraordinary items #)	(2.11)	(14.09)	10.02	(4.75)
4	Net Profit / Loss for the period after tax (after Exceptional and / or Extraordinary items #)	(2.03)	(14.34)	10.08	(4.85)
5	Total Comprehensive Income for the period [comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	(2.03)	5.57	10.08	15.06
6	Paid up Equity Share Capital	513.53	513.53	513.53	513.53
7	Reserves (excluding Revaluation Reserve as shown in the Audited Balance sheet of previous year)	-	-	-	163.75
8	Earnings Per Share (Face value of Rs.10/- each) (not annualised) Basic & Diluted:	(0.04)	(0.28)	0.20	(0.09)

Notes:

1. The above information has been extract from the detailed Quarterly Financial Results which have been reviewed by the Audit Committee, approved by the board of Directors, subjected to a limited review by the statutory auditors and filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The above results are approved by the Board of Directors in their meeting held on 9th August 2022 at the registered office of the Company. The full format of the Quarterly Financial Results are available on the Stock Exchange Website i.e. www.bseindia.com and on the company's website www.munothfinancial.com
2. The financial results have been prepared in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (IND-AS) prescribed under section 133 of the companies act 2013 and other accounting principles generally accepted in India.
3. Figures for the previous period have been regrouped/rearranged wherever necessary.
4. Segment wise reporting is not applicable as the company operates in a single segment viz; capital Market Segment.

for MUNOTH FINANCIAL SERVICES LTD
Jaswant Munoth
Managing Director
DIN No: 00769545

Place : Chennai
Date : 09.08.2022

ஐபி ரிங்ஸ் லிட்.

(அமால்கமேஷன் குழுவின் ஓர் அங்கம்)
பதிவு அலுவலகம் : D-11/12, தொழிற்பேட்டை, மறைமலை நகர் - 603 209.
போன் : 044 - 27452816. இமெயில் : investor@iprings.com இணையதளம் : www.iprings.com
CIN : L28920TN1991PLC020232

30 ஜூன் 2022ல் நிறைவுற்ற காலாண்டுக்கான
தணிக்கை செய்யப்படாத தனித்துள்ள மற்றும் தொகுக்கப்பட்ட நிதி நிலை முடிவுகள்

(ரூ. லட்சங்களில்- பங்கொன்றுக்கு ஈட்டிய தொகை தவிர)

வ. எண்.	விவரங்கள்	தனித்துள்ள				தொகுக்கப்பட்ட		
		காலாண்டு முடிய			ஆண்டு முடிய	காலாண்டு முடிய		ஆண்டு முடிய
		30.06.2022	31.03.2022	30.06.2021	31.03.2022	30.06.2022	31.03.2022	31.03.2022
		தணிக்கையாகாதது	குறிப்பு 5-ஐ பார்க்கவும்	தணிக்கையாகாதது	தணிக்கையானது	தணிக்கையாகாதது	குறிப்பு 5-ஐ பார்க்கவும்	தணிக்கையானது
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	8,004.05	7,325.05	6,283.48	27,500.84	8,004.05	7,325.05	27,500.84
2	நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்)	326.88	421.43	566.40	1,105.03	326.88	421.43	1,105.03
3	நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு முன் (விதிவிலக்கான இனங்களுக்குப் பின்)	326.88	421.43	566.40	1,105.03	314.33	429.11	1,103.16
4	நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு பின் (விதிவிலக்கான இனங்களுக்குப் பின்)	229.21	343.89	404.53	821.48	216.66	351.57	819.61
5	மொத்த விரிவான வருமானம் இக்காலகட்டத்தில் (இக்காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப்பின்) உள்ளடக்கியது)	249.50	399.83	390.82	836.23	236.95	407.51	834.36
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59	1,267.59
7	பிற சமபங்கு	-	-	-	9,917.80	-	-	9,915.93
8	பங்கொன்றுக்கு ஈட்டிய வருமானம் (ரூ.10/- ஒன்றுக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்காக)							
	அ) அடிப்படை	1.81	2.71	3.19	6.48	1.71	2.77	6.47
	ஆ) குறைமதிப்பீடு	1.81	2.71	3.19	6.48	1.71	2.77	6.47

தணித்துள்ள குறிப்புகள் :

1. மேலே குறிப்பிட்டுள்ள நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் இயக்குநர் குழுவால் 8 ஆகஸ்டு 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2022-ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவலானது மார்ச் 31, 2022 ஆண்டு முடிந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட சாரம் ஆகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013-ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயம் (INDAS) 18-க்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, தலைமை செயல்பாட்டு முடிவு செய்பவராக இருப்பதால் ('CODM'), உள் வணிக அறிக்கை முறையை அடிப்படையாக கொண்டு, நிறுவனத்திற்கு ஒரே ஒரு பிரிவு மட்டுமே என்பதை அடையாளம் கண்டுள்ளது, அதாவது ஆட்டோ உபகரணங்கள்-பிஸ்டன் ரிங்ஸ், வேறுபாட்டுநுட்ப கியர்கள், போல் வீல் மற்றும் பிற டிரான்ஸ்மிஷன் பாகங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையாகும். அதன்படி, Ind AS 108-ன் (நடவடிக்கை பிரிவுகள்) இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. இந்திய பாராளுமன்றம், கம்பெனிகள் வழங்கும் பிராவிடண்ட் ஃபண்ட் மற்றும் கருணை தொகையினை - "சமூக பாதுகாப்பு சட்டம் 2020"-ன் படி ஏற்படும் தாக்கத்தை குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்கும். மேலும் மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் 13.11.2020 அன்று இதற்கான "சமூக பாதுகாப்பு சட்டம் 2020"-ன் மாதிரி விதிமுறையை வெளியிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை அமைச்சகம் வரவேற்று, அமைச்சரவையின் பரிசீலனையில் உள்ளது. இக்கம்பெனியின் நிர்வாகம் மேற்படி விதிமுறை அமல்படுத்தபட்ட பிறகு, பின்னர் சரிபார்த்து அதனுடைய தாக்கம் நிர்வாகத்திர்க்கு எந்த அளவு நிதி ரீதியாக ஏற்படுத்தும் என்பதை ஆராய்ந்து முடிவெடுக்கும். மேலும் விதிமுறை அமல்படுத்தபட்ட பிறகு நிதி ரீதியாக ஏற்படும் தாக்கம் பற்றி வெளியிடப்படும்.
4. 2021-22 நிதியாண்டுக்கான ஈவுத்தொகையாக ரூ.2/- சமபங்கு ஒன்றுக்கு (தலா ரூ.10/- முகமதிப்பு கொண்ட சமபங்கிற்கு) என இயக்குனர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அதை ஆகஸ்டு 8, 2022 அன்று நடைபெற்ற நிறுவனத்தில் ஆண்டு பொது கூட்டத்தில் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
5. மார்ச் 31, 2022-ல் முடிவடைந்த காலாண்டின் மேலே குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும், டிசம்பர் 31, 2021-ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான வெளியிடப்பட்ட தேதி வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன் செய்யப்பட்ட இலக்கங்களாகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
6. முந்தைய கால இலக்கங்கள் இக்காலகட்டத்தோடு உறுதி செய்யும் வகையில் தேவைப்படும் இடத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டு உள்ளன.

தொகுக்கப்பட்ட குறிப்புகள் :

1. மேலே குறிப்பிட்டுள்ள நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் இயக்குநர் குழுவால் 8 ஆகஸ்டு 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2022-ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவலானது மார்ச் 31, 2022 ஆண்டு முடிந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட சாரம் ஆகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013-ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயம் (INDAS) 18-க்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. நிறுவனத்தின் முக்கிய வணிகம் ஆட்டோ உதிரி பாகங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகும். இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. இந்திய பாராளுமன்றம், கம்பெனிகள் வழங்கும் பிராவிடண்ட் ஃபண்ட் மற்றும் கருணை தொகையினை - "சமூக பாதுகாப்பு சட்டம் 2020"-ன் படி ஏற்படும் தாக்கத்தை குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்கும். மேலும் மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் 13.11.2020 அன்று இதற்கான "சமூக பாதுகாப்பு சட்டம் 2020"-ன் மாதிரி விதிமுறையை வெளியிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை அமைச்சகம் வரவேற்று, அமைச்சரவையின் பரிசீலனையில் உள்ளது. இக்கம்பெனியின் நிர்வாகம் மேற்படி விதிமுறை அமல்படுத்தபட்ட பிறகு, பின்னர் சரிபார்த்து அதனுடைய தாக்கம் நிர்வாகத்திர்க்கு எந்த அளவு நிதி ரீதியாக ஏற்படுத்தும் என்பதை ஆராய்ந்து முடிவெடுக்கும். மேலும் விதிமுறை அமல்படுத்தபட்ட பிறகு நிதி ரீதியாக ஏற்படும் தாக்கம் பற்றி வெளியிடப்படும்.
4. 2021-22 நிதியாண்டுக்கான ஈவுத்தொகையாக ரூ.2/- சமபங்கு ஒன்றுக்கு (தலா ரூ.10/- முகமதிப்பு கொண்ட சமபங்கிற்கு) என இயக்குனர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அதை ஆகஸ்டு 8, 2022 அன்று நடைபெற்ற நிறுவனத்தில் ஆண்டு பொது கூட்டத்தில் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
5. மார்ச் 31, 2022-ல் முடிவடைந்த காலாண்டின் மேலே குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும், டிசம்பர் 31, 2021-ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான வெளியிடப்பட்ட தேதி வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன் செய்யப்பட்ட இலக்கங்களாகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
6. இந்த தணிக்கை செய்யப்படாத தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் ஐபி ரிங்ஸ் லிமிடெட் (நிறுவனம் அல்லது பெற்றோர்) மற்றும் இணை நிறுவனம் IPR எமினாக்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனத்தின் முடிவுகள் உள்ளடங்கியது.
7. இணை நிறுவனம் IPR எமினாக்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் டிசம்பர் 24, 2021 அன்று இணைக்கப்பட்டது மற்றும் அதன்படி ஜூன் 30, 2021-க்கான காலாண்டு தொகுக்கப்பட்ட முடிவுகள் வழங்கப்படவில்லை.
8. முந்தைய கால இலக்கங்கள் இக்காலகட்டத்தோடு உறுதி செய்யும் வகையில் தேவைப்படும் இடத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டு உள்ளன.

ஐபி ரிங்ஸ் லிட்.-காக
A வெங்கடரமணி
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 08.08.2022

மெகாசாப்ட் லிமிடெட்

MEGASOFT

CIN: L72200TN1999PLC042730
பதிவு அலுவலகம் : எண். 85, கச்சேரி சாலை, மயிலாப்பூர், சென்னை, இந்தியா–600 004
கார்ப்பரேட் அலுவலகம்: 01வது மாடி, பிளாக் 3, மை ஹோம் ஹப், மாதாபூர், ஐதராபாத்–500 081.தெலுங்கானா, இந்தியா
Phone: +91–44–24616768; Fax: +91–44–24617810; email: investors@megasoft.com. Website : www.megasoft.com

30 ஜூன் 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் மூன்று மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

ரூ. லட்சத்தில்

தனியானது				விவரங்கள்	ஒருங்கிணைந்தது			
முடிந்த காலாண்டு 30 ஜூன் 2022	முடிந்த காலாண்டு 30 ஜூன் 2021	முடிந்த ஆண்டு 31 மார்ச் 2022	முடிந்த ஆண்டு 31 மார்ச் 2021		முடிந்த காலாண்டு 30 ஜூன் 2022	முடிந்த காலாண்டு 30 ஜூன் 2021	முடிந்த ஆண்டு 31 மார்ச் 2022	முடிந்த ஆண்டு 31 மார்ச் 2021
997.89	772.18	4081.00	2333.01	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	997.89	1642.15	7909.81	6626.62
102.85	229.91	278.50	138.03	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது(அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	102.85	164.25	182.34	184.55
207.86	229.91	620.37	138.03	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	197.75	164.25	524.21	184.55
207.86	229.91	558.23	138.88	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	197.75	164.25	462.13	184.81
207.86	229.91	545.59	132.22	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	197.75	164.25	449.49	178.15
7377.00	4426.73	7377.00	4426.73	சமபங்கு மூலதனம்	7377.00	4426.73	7377.00	4426.73
8508.14	7984.61	8300.29	7754.70	மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக ரிசர்வுகள்	8497.27	7140.82	8299.52	6964.53
				ஒரு பங்கு சம்பாதியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) ஒன்று ரூ.10/–				
0.28	0.52	0.89	0.31	அடிப்படை	0.27	0.37	0.74	0.42
0.28	0.52	0.89	0.31	பலம் குறைந்தது	0.27	0.37	0.74	0.42

மெகாசாப்ட் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
சுனில் குமார் கலிதிண்டி
நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி
DIN: 00059107

தேதி : 08.08.2022
இடம் : ஐதராபாத்

குறிப்பு: SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 ஜூன் 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் மூன்று மாதங்களுக்கான காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com, www.nse.india.com மற்றும் கம்பெனியின் இணையதளம் http://megasoft.com/investor–services.html ல் உள்ளது.